பக்கங்கள்:-22

காலை முரசு

## அரச ஊழியர்களுக்கு

# ஜனவரி முதல் சம்பள உயர்வு

### அமைச்சரவை அங்கீகாரம்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வுள்ள கொடுப்பனவில் 5 ஆயிரம் ரூபாவை இம்மாதம் ஜனவரி முதல் 06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 24 | செவ்வாய்க்கிழமை | 09.01.2024 | அதிர்வு 161

# ரணிலை நம்பவே முடியாது!



## அவரின் வடக்கு விஜயத்தால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்கின்றார் விக்கி

(எஸ்.நிதர்ஷன்)

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயம் அரசியல் ரீதியானது என்பது வெளிப்படை. ஜனாதிபதியின் வருகையால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. தானே கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு இங்கு வந்து புதிதாக வாக்குறுதிகளைக் கொடுக்கும் ஒருவரை நாங்கள் நம்புவது மிகக் கடினமானது.”**

**- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.** 06

# இன்று மக்கள் விரும்பும் ஒரே தலைவர் ரணிலே!

## அவர் வரலாற்றுச் சாதனை படைப்பார் என்று வஜிர நம்பிக்கை



“மூவின மக்களும் விரும்புகின்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அமோக வாக்குகளால் அவர் வெற்றி பெற்றே தீருவார். அவரின் வெற்றி வரலாற்று வெற்றியாக – வரலாற்றுச் சாதனையாகப் பதிவு செய்யப்படும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் விரும்புகின்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார். வடக்கு விஜயத்தின்போதும் இதனை நாம் நேரில் அவதானித்தோம். மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வருவதையே வடக்கு மக்கள் விரும்புகின்றனர். அவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டு மக்களின் ஏகோபித்த தீர்மானமும் அதுவே. எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் 06

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

### கிளிநொச்சியில் சோகம்



மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, 06




அதிகம் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த எரிபொருள், மின் சக்தி அமைச்சர் காஞ்சனா விஜயசேகரவுக்கும் அவரது அரசுக்கும் நேரம் பார்த்து சரியான ‘செக் மேட்’ வைத்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இலங்கை மின்சார சபையின் மின் விநியோகத்துக்கு எக்கச்சக்கமான கட்டணங்களை விதித்திருக்கையில், 06




# “விடுதலை செய்; விடுதலை செய்; ஜெனிற்றாவை விடுதலை செய்!”

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

புதிய வருடத்தில் வவுனியாவுக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க முற்பட்ட போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட, பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களைக் கண்டறியும் போராட்டத்தை முன்னெடுத்து வரும் தமிழ்த் தாயின் விடுதலையை வலியுறுத்தி வன்னியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கங்களின் தாய்மார், நேற்று முல்லைத்தீவு புனித பேதுரு தேவாலய முன்றலில் ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்து மாவட்ட செயலாளர் அலுவலகம் வரை சென்று, சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலைவியின் விடுதலைக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நான்கு நாள் பயணமாக வடக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனவரி 5 கடந்த வெள்ளிக்கிழமை, வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்து நகர மண்டபத்துக்கு அருகில் வந்த வேளை பொலிஸார் தடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்ட செயலாளர் சிவானந்தன் ஜெனிற்றா வவுனியா நகர மண்டபத்துக்குள் செல்ல முற்பட்ட போது, அவரையும், போராட்டத்தை வீடியோ எடுத்த மீரா ஜஸ்மினையும் பொலிஸார் கைது செய்தனர்.

இருவரையும் அன்றைய தினம் பொலிஸார் வவுனியா நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது, மீரா ஜஸ்மினைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், சிவானந்தன் ஜெனிற்றாவை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டனர்.

போராட்டங்கள் நடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில், சிவானந்தன் ஜெனிற்றாவுக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றிருந்த நிலையில், அதை மீறி அவர் போராட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், அவரின் கைதுக்கு எதிராக முல்லைத்தீவில் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த தமிழ் தாய்மார்கள், அப்பகுதியில் பெய்த கடும் மழையையும் பொருட்படுத்தாமல், பொலிஸாரின் அராஜகத்தை நிறுத்துமாறும், ஜெனிற்றாவை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தினர்.

“பாதிக்கப்பட்ட உறவு ஜெனிற்றாவை விடுதலை செய், சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு, ரணில் அரசு, நட்டஈடு வழங்கி போராட்டங்களை நிறுத்தலாம் கனவு காணாதே” போன்ற கோஷங்களை எழுப்பியும், பதாதைகளைத் தாங்கியவாறும் தமிழ்த் தாய்மார் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரும் போராட்டத்தை 2 ஆயிரத்து 500 நாள்களைக் கடந்து தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் தாய்மார், 14 வருடங்களுக்கு மேலாகக் காணாமல்போயுள்ள தமது அன்புக்குரியவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு ஒரே குரலாககே கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மின் கட்டண திருத்த யோசனை ஏதும் கிடைக்கவில்லை; தெளிவுபடுத்துகிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

மின் கட்டண திருத்தம் தொடர்பில் யோசனையொன்று தமது ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் அறிக்கை பொய்யானது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு அந்த ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அவ்வாறான யோசனையொன்று இலங்கை மின்சார சபையினால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக ஒருசில ஊடகங்கள் செய்தி வெளியிடப்பட்டிருந்தாலும் நேற்று வரையில் அவ்வாறான யோசனை எதுவும் தமது ஆணைக்குழுவுக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

# வருமான வரி செலுத்தக்கூடிய 10 லட்சம் பேரில் 5 லட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்துகின்றனர்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



**“நாட்டில் வருமான வரி செலுத்தக் கூடியவர்கள் 10 லட்சம் பேர் இருந்தும், அவர்களில் 05 லட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்தி வருகின்றனர். மறைமுக வரியைக் குறைக்கவும், நேரடி வரியை அதிகரிக்கவும், வரி ஏய்ப்புச் செய்யும் சுமார் 05 இலட்சம் பேரையும் வரி வலைக்குள் கொண்டு வர வேண்டும்.”**

**– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சரவை அந்தஸ்தற்ற அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

2019 ஆம் ஆண்டின் இறுதியில் 1,705,233 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 437,547 ஆகக் குறைந்துள்ளது. எமது அரசாங்கத்தின் புதிய கொள்கைகளால், டிசம்பர் 31, 2023 ஆண்டுக்குள் வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை 1,002,029 ஆக உயர்த்த முடிந்தது. நாம் மேலும் அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், கடந்த வருட இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 08 வீதமாக இருந்த அரச வருமானத்தை 10 வீதமாக அதிகரிக்க முடிந்தது. 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் அதை 12 வீதமாக உயர்த்த இலக்கு வைத்துள்ளோம். ஓரளவு நிலையான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறுவதற்கு 2025 ஆம் ஆண்டளவில் 15 வீதமாக அதிகரிக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், வற் வரிக்கு சில திருத்தங்கள் செய்யப்படுகின்றன. இதுவரை 15 வீதமாக இருந்த வற் வரி 18 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 80 மில்லியன் ரூபாவாக இருந்த வற் வரி எல்லை 60 மில்லியன் ரூபாவாக அமையும். 2001 இல் வற் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகள் வற் வரிக்கு உட்பட்டன. அதில் குறைந்த எண்ணிக்கையிலான பொருள்களுக்கு வரி திருத்தச் சட்டத்தின் ஊடாக விலக்களிக்கப்பட்டன. விலக்கு அளிக்கப்பட்ட 138 பொருள்கள் மற்றும் சேவைகளில், 97 வகையானவை இந்தத் திருத்தத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

வற் வரி திருத்தத்தின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரச வருமானம் 2.07 வீதத்தால் உயரும். இது 645 பில்லியன் ரூபா. வரி விகிதங்களின் அதிகரிப்புடன் பணவீக்கம் 2.5 வீதம் அதிகரிக்கும் என மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு பகுப்பாய்வு செய்துள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் மீண்டும் 5 வீதத்துக்கு கொண்டு வர முடியும் என மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

70 வீத பணவீக்கம் இருந்த நாட்டில் தற்போது 5 வீத பணவீக்க விகிதத்தை பேணவே நாம் முயற்சிக்கிறோம். அத்துடன், இந்த நெருக்கடி நிலையிலும் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது எமது நிதி முகாமைத்துவத் திறன்களின் தனித்துவமான அம்சமாகும்.

இன்று நேரடி வரிகள் 30 வீதமாகவும் மறைமுக வரிகள் 70 வீதமாகவும் உள்ளன. இந்த வரி வீதத்தை மாற்றி, நேரடி வரி விகிதத்தை 40 வீதத்துக்கு கொண்டு வருவதே எமது இலக்கு. உலகில் அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டின் நிலை அதுவேயாகும். வரி செலுத்தக்கூடிய பலம் வாய்ந்த 10 மில்லியன் மக்கள் உள்ளனர். ஆனால் தற்போது 05 லட்சம் பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். எனவே, வரி ஏய்ப்பு செய்பவர்களை கண்டறிந்து, அவர்களை வரி வலைக்குள்ளே கொண்டு வர வேண்டும். பின்னர் மறைமுக வரிகளைக் குறைக்க முடியும்.

பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து வரிக்கோப்பு இலக்கத்தை அமுல்படுத்தத் தயாராகி வருகிறோம். தற்போது அதனைப் பதிவு செய்வதில் சிக்கல்கள் உள்ளன. மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக உள்ளதால்தான் அந்தப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எனவே பிரதேச செயலக மட்டத்தில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசித்து வருகிறோம். அதனை ஒன்லைன் முறை மூலம் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வரி செலுத்துபவர் ஒரு நாட்டில் ஸ்திரத்தன்மையை அடைந்த வலிமையான பிரஜை என்பது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு இவ்வாறு மக்களின் மனப்பான்மையை மாற்றுவது முக்கியம். எனவே இத்திட்டம் வெற்றியடைய அனைவரின் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.”– என்றார்.






# 2025 ஆம் ஆண்டாகும் போது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

"நிகழ்காலத்தை விட எதிர்காலத்தில் கவனம் செலுத்தி ஒரே இலங்கையர்களாக அனைவரும் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும். அனைத்து பிரச்சினைகளுக்கும் 2025 ஆம் ஆண்டாகும் போது தீர்வு வழங்க எதிர்பார்க்கிறோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.







கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தத்துடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் 2025 ஆம் ஆண்டாகும் போது தீர்வு வழங்க எதிர்பார்க்கிறோம். இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான அரசியல் தீர்வுகள் வழங்கப்படும்.

அத்துடன், நாகதீப விகாரையை மையமாகக் கொண்ட சமய நிலையத்தை மேலும் விரிவுபடுத்தவும், யாழ்ப்பாணத்தில் தனித்துவமான இந்து **(5ஆம் பக்கம் பார்க்க..)**



## 2025ஆம் ஆண்டாகும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலயத்தை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டு முன்னேறுவோம். இது குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களின் ஆலோசனைகள், திட்டங்கள் தேவை.

நாம் நிகழ்காலத்தையன்றி எதிர்காலத்தை பற்றி நோக்க வேண்டும். டி.பி. ஜயதிலக்க உருவாக்கியது போன்ற திட்டம்



மீண்டும் அவசியம். மேலும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடாக முன்னேறக்கூடிய ஒரு திட்டம் தேவை.

இலங்கை ஆரம்பகாலம் முதலே விவசாயத்தை மையமாகக் கொண்ட நாடாகும். பாதுகாப்பான விவசாயத்தின் மூலம் நமது உணவுப் பயிர்களை ஏற்றுமதி செய்யலாம். இது போன்ற பாரிய செயற்திட்டங்கள் எம் முன்னால் அதிகம் இருக்கின்றன.

மேலும், ஊழல் தடுப்பு ஆணைக்குழு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கான குழு அரசமைப்புச் சபையால் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், நமது நிதி விதிமுறைகளுக்குப் பதிலாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி நிதிக் கட்டுப்பாடு குறித்த அறிக்கையை அளித்துள்ளோம்.

எவ்வாறு விலைமனு கோருவது, நிதியை எவ்வாறு செலவு செய்வது உள்ளிட்ட அனைத்தும் அதில் இடம் பெறுள்ளன. அதனை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்



தில் தனி ஆணைக்குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அரச நிதி அதிகாரிகளும் தங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

மேலும் இந்த நாட்டில் அரசியல் கட்சிகளை நிர்வகிக்கும் சட்ட விதிகள் தேவை. உலகின் பிற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல் செயல்முறைகளை ஆய்வு செய்ய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய விடயம்.

நாம் உலகளாவிய ரீதியில் செயற்படுவதாக இருந்தால், நாம் ஏனைய நாடுகளுடன் இணைய வேண்டும். அதற்கு நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தேவை. சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஏற்கனவே கையெழுத்தாகியுள்ளது. அதற்காக இந்தியாவுடனான பேச்சு நிறைவடைந்து வருகிறது. சீனாவுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் தாய்லாந்துடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். குறிப்பாக தாய்லாந்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் ஒரு நாடாக எமக்கு மிகவும் முக்கியமானது.

மியான்மாருடனும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மியான்மாரில் பிரச்சினைகள் இருந்தாலும் அதில் நாம் ஈடுபட வேண்டியதில்லை. லாவோஸ் மற்றும் வியட்நாமுடன் நமது உறவுகளைப் பேண வேண்டும். அவர்களின் பொருளாதாரம் உலகிற்கு திறந்து விடப்பட்டது போல் நமது பொருளாதாரத்தையும் உலகிற்கு திறந்து விட முடியும். அவர்கள் வெற்றி பெறும் போது, நாம் எப்படி தோல்வியடைவோம்? கம்போடியாவைக் கருத்தில் கொண்டால், அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் பெரும் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளனர். சில கட்சிகள் வழமையான விதத்தில் சிந்தித்தாலும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரே பொருளாதாரத் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்."– என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேரம் பார்த்து அதற்கு இலக்கு வைத்து அடித்திருக்கின்றார் சஜித்.

எரிபொருள் விலை உயர்வு, பொதுவான விலைவாசி அதிகரிப்பு ஆகியவற்றைக் காரணம் காட்டி மின் கட்டணங்களை கட்டுமட்டின்றி உயர்த்தியிருந்தார் அமைச்சர் காஞ்சன விஜயசேகர.

இதன் மூலம் சில மாத காலத்துக்குள் ஐயாயிரத்து இரு நூறு கோடி ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ள இலங்கை மின்சார சபை, மறுபுறத்தில் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல், கட்டண நிலுவுகளை செலுத்த இயலாமல், தடுமாறிப் போயிருப்போரின் 8 லட்சம் மின்விநியோகங்களைத் துண்டித்திருப்பதாக சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் மக்களுக்கு நீதி வழங்கக் கோரி, எதிர்க்கட்சி தலைவர் அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து முறையிட்டிருக்கின்றார்.

ஏற்கனவே நாட்டில் கடும் மழை பெய்து நீரேந்து பகுதிகள் எல்லாவற்றிலும் தாராளமான நீர் தேக்கமடைந்துள்ளது. இதனால் பெருமளவு நீர் மின்சாரத்தை குறைந்த விலையில் உற்பத்தி செய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. எரிபொருள் விலை உயர்வு என்ற பெயரில் மின்கட்டணத்தை அதிக அளவில் உயர்த்தியது இப்போது தேவையற்ற விடயமாகிவிட்டது. இந்த அடிப்படையில் மின் கட்டணத்தை கணிசமாகக் குறைக்க வாய்ப்பு இருந்தும் அதனை அரசு செய்யாமல் இழுத்தடித்து வந்தது. அதற்கிடையில் நேரம் பார்த்து, சத்தம் சந்தடியின்றி, காய் நகர்த்திருக்கின்றார் சஜித். பெரிய ஆரவாரப்படுத்தாமல், திடுதிப்பென அவர் உயர்நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்.

இனிமேல், மின்கட்டணத்தை குறைக்கும்படி உயர்நீதிமன்ற உத்தரவிட்டாலோ –

அல்லது அரசு தானாகவே நினைத்து மின் கட்டணத்தைக் குறைத்தாலோ –

அதனால் பெயர் சஜித்துக்குத்தான். அவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டமையால்தான் மின் கட்டணம் குறைக்கப்பட்டது என்று மக்கள் பேசுவர்.

மின் கட்டணத்தை குறைப்பது என்று அரசு முடிவு எடுத்தால், அதை நேரத்துடனேயே – திட்டவட்டமாக – உத்தியோகபூர்வமாக – குறைந்தபட்சம் நாடாளுமன்றத்திலாவது – அறிவிக்க வேண்டும். அறிவித்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தால், கடைசியில் இப்படி எதிர்க்கட்சித் தலைவர் உயர்நீதிமன்றத்திற்கு போனமையால்தான் வேறு வழியின்றி, மின் கட்டணத்தைக் குறைக்க இணங்கியுள்ளார்கள் என்று அரசு கெட்ட பெயர் எடுக்க வேண்டித்தான் நேரும்.

## ரணிலை நம்பவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் வடக்கு விஜயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதியின் வடக்கு விஜயம் தொடர்பில்தெற்கில் இருக்கும் கட்சிகள் கூட பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து இருக்கின்றன. குறிப்பாக அவர் மக்களுடைய பணத்தைச் செலவழித்து வீணாக வடக்குச் சென்று இருக்கின்றார் என்றும், இதனால் மக்களுக்கு எதுவும் கிடையாது என்றும் பல குற்றச்சாட்டுகளை அந்தக் கட்சிகள் முன்வைத்திருக்கின்றன.

அரசியல் நோக்கமாகவேதான் அவர் இங்கு வந்திருக்கின்றார் என்பது உண்மையிலேயே எல்லோருக்கும் தெரியும். அவருடைய செயற்பாடுகளும் அதனையே வெளிப்படுத்தி இருக்கின்றன.

ஆனால், எங்களுக்கு இதில் மன வருத்தத்தைத் தருகின்ற விடயம் என்னவென்றால் அரசியல் ரீதியாக சில நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்தபோது அதைத் தருகின்றோம், இதைத் தருகின்றோம் என்றெல்லாம் எங்களுக்கு அவர் கூறியிருந்தார். ஆனால், இங்கே வந்திருந்து பொருளாதார முன்னேற்றம் தொடர்பாகவும், அபிவிருத்தி வேலைத் திட்டம் சம்பந்தமாகவும் அவர் பேசி இருக்கின்றார். அதுவும் எங்களிடத்தே சொல்லியது போல் மக்களிடத்தேயும் அதைத் தருவேன், இதைத் தருவேன், அதைச் செய்வேன் என்பதாக அவர் சொல்லியிருக்கின்றார்.

எனினும், இதற்குரிய பணத்தை எங்கிருந்து எடுக்கப் போகின்றாரோ தெரியவில்லை. பணத்தை எங்கிருந்து, எந்த நாட்டில் இருந்து எடுக்கப் போகின்றார் என்றோ அல்லது இலங்கையில் அவ்வளவு பணம் இருக்கின்றதா என்றோ எனக்குத் தெரியவில்லை.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் சொன்ன வேலைத் திட்டங்கள் அல்லது வாக்குறுதிகள் ஒன்றும் நடைமுறைப்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆகவே, இங்கு வந்து அவர் செல்வதில் எந்தவிதமான நன்மைகளும் நமது மக்களுக்குக் கிடைக்கப்போவதில்லை.

ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையிலோ அல்லது ஜனாதிபதியைப் பொறுத்தவரையிலோ வடக்குக்கான இந்த விஜயம் என்பது பல்ஸை (பல்ஸ்) பார்ப்பதாகத்தான் அமைந்திருந்தது.

இதற்கு என்ன விதமான வரவேற்பு தனக்கு இருக்கும் என அறிவதாகக் கூட அவருடைய விஜயம் அமைந்திருக்கலாம். ஆனால், முன்னரைப் போன்று அவருக்கு ஆதரவு இங்கே இல்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

அவருடைய வருகை அரசியல் ரீதியானது என்பது வெளிப்படை. ஜனாதிபதியின் வருகையால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது.

தானே கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு இங்கு வந்து புதிதாக வாக்குறுதிகளைக் கொடுக்கும் ஒருவரை நாங்கள் நம்புவது மிகக் கடினமானது." – என்றார்.

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இராமநாதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலய தேர் திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 29 வயதுடைய ஜெகதீஸ்வரன் பவித்திரன் என்ற வவுனியா, பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் சடலம் கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இன்று மக்கள் விரும்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேர்தலில் அமோக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றே தீருவார். இந்த வெற்றி வரலாற்று வெற்றியாக – வரலாற்றுச் சாதனையாகப் பதிவு செய்யப்படும்.

நாட்டை அழித்தவர்களை விரட்டிய மக்கள், இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் அணிதிரண்டுள்ளனர். நாட்டை மீட்ட தலைவர் மட்டுமல்ல உலகின் சிறந்த தலைவரும் ரணில் விக்கிரமசிங்கவே." – என்றார்.

## ஜனவரி முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த யோசனை ஜனாதிபதியால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்க முன்மொழியப்பட்ட 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 5 ஆயிரம் ரூபாவை ஜனவரி முதல் வழங்குவதற்கே அமைச்சரவை அங்காரம் வழங்கியுள்ளது.

முன்னதாக இந்தக் கொடுப்பனவை ஏப்ரல் மாதத்தில் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## லஸந்தவுக்கு நீதி கிட்டுமா?

‘த ஸண்டே லீடர்’ பத்திரிகையின் ஆசிரியர் - சிரேஷ்ட ஊடகவியலாளர் - லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இலங்கையில்ஏனைய பலகொடூரக்கொலைகள் போல இக்கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிகளும், தண்டிக்கப்படாமல், சுதந்திர மனிதர்களாக சமூகத்தில் நடமாட விடப்பட்டிருக்கின்றார்கள். சில சமயங்களில் மக்களின் தலைவர்களாகவும், மக்கள் பிரதிநிதிகளாகவும் கூட அவர்கள் தொடர்ந்து விளங்கக்கூடும். அக்காலத்தில் மோசமாகப் பேணப்பட்ட தண்டனை விலக்களிப்பு போக்கு இத்தகைய கொடூரக் கொலைகளைப் புரிந்தவர்களுக்கும், அவற்றுக்கு வழிகாட்டிய சூத்திரதாரிகளுக்கும் குற்றங்களில் இருந்து மூடி மறைக்கும் பாதுகாப்பைத் தந்துள்து. அது இன்று வரை நீடிக்கின்றது.

தான் கொலை செய்யப்படுவார் என்பதை முற்கூட்டியே நன்கு புரிந்து கொண்ட லஸந்த விக்கிரமதுங்க, தன் கொலை விசாரணை இப்படித்தான் பயனற்று, தொடராமல் போகும் என்று சாக முன்னரே எழுதி வத்திருந்தமைதான் அந்த ஊடகவியலாளனின் தீர்க்கதரிசனச் சிறப்பு.

தன்னைக் கொலை செய்யப்போகின்ற சூத்திரதாரியைக் குறிப்பிட்டு “என் மரணத்தின்பாதையைநான்அறிவேன்.(நான்கொல்லப்பட்டதும்) நீ போலியான சத்தத்தை எழுப்பிக் கொண்டு, பொலிஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால், ஒன்றும் வெளியில் வராது.....” - என்று தமது கடைசி உயில் போல தாம் எழுதிவைத்த குறிப்பில் குறிப்பிட்டிருந்தார் லஸந்த விக்கிரமதுங்க.

அதுவே நடந்து கொண்டிருக்கின்றது.

அதையே அவரின் இந்தப் பதினைந்தாவது ஆண்டு நினைவு நாளில் சுட்டிக்காட்டியிருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை.

லஸந்த விக்ரமதுங்க படுகொலையுடன் தொடர்புடையவர்களை தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

“லஸந்தவிக்கிரமதுங்கபடுகொலைவழக்கை உள்ளக ரீதியில் தீர்ப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்ற போதிலும், வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அதுமாத்திரமன்றி லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறல்உறுதிசெய்யப்படவேண்டும்என்பதைவலியுறுத்திதொடர்ச்சியாகப் போராடிவரும் அவரது குடும்பத்தினருக்கு இன்றைய திகதி வரை நீதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில், லஸந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தண்டனைகளிலிருந்து விடுபடுவதை உடன் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அவர்களைத் தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யவேண்டும்.” - என்று மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

ஆனால், எதுவும் நடக்கப் போவதில்லை என்பது உறுதி. யுத்தகாலத்தில் தென்னிலங்கைத் தரப்புப் புரிந்த அனைத்து அடாவடித்தனங்களையும் ‘பயங்கரவாதத்துக்கு எதிரான நியாயமான நடவடிக்கை’ என்று வகைப்படுத்தி அவற்றை மூடி மறைக்கும் போக்கே, பௌத்த - சிங்கள அரசின் கொள்கைக் கோட்பாடாக இருக்கும்போது - தொடரும் போது - அதிலிருந்து மாற்றான அணுகுமுறை கொழும்பு ஆட்சிப்பீடத்திலிருந்து - அதிகாரத் தரப்பிடமிருந்து - வருவது துர்லபமே.

இலங்கை அரசுகளினதும் பல அரசியல்வாதிகளினதும்உண்மைமுகங்களைதுணிச்சலுடன் வெளிக்கொண்டு வந்து அம்பலப்படுத்திய பிரபலமான ஊடகவியலாளரான லஸந்த விக்கிரமதுங்க, குற்றவாளிகள் சமூகத்தில் எந்தவொரு நிலையில் இருந்தாலும் பின்வாங்காமல் தனது பத்திரிகையூடாக அது பற்றிய உண்மைகளை தைரியமாக வெளிக் கொணர்ந்தார். அதற்காக முன்னரும் பல தடவைகள் அவர் இலக்கு வைக்கப்பட்டார்.

1995 பெப்ரவரியில் லஸந்த அவரது வாகனத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 அக்டோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்திற்கு தீவைத்து நிர்மூலஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இந்த சம்பவங்களில் எந்தவொன்று தொடர்பிலும் பொலிஸார் உரிய விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுவே அவரது படுகொலை விடயத்திலும் தொடர்கின்றது.

# மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் இளைஞனின் ரகளையில் 4 பொலிஸார் படுகாயம்!

## தாய், சகோதரியுடன் இளைஞன் விளக்கமறியலில்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் மீது இளைஞர் ஒருவர் தாக்குதல் நடாத்தினார் எனக் கூறப்படுகின்றது. இதில் 4 பொலிஸார் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர், அவரது தாயார், சகோதரி ஆகிய 3 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு பதில் நீதிவான் சனிக்கிழமை உத்தரவிட்டார்.

கொக்குவில் 2 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவர் மதுபோதையில் கடந்த வெள்ளிக்கிழமை 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு அந்தப் பகுதி வீதியில் நிறுத்திவைத்திருந்த ஓட்டோ ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டிருக்கின்றார். ஓட்டோ சேதமடைந்துள்ள நிலையில் அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து மதுபோதையில் இருந்த இளைஞனை அவரது தாயார், சகோதரி தமது தோள்களில் சுமந்தவாறு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற போது, அங்கிருந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் அவரைக் கதிரையில் இருக்குமாறு தெரிவித்திருக்கின்றார். அப்போது அந்த இளைஞன் அந்தக் கதிரையைத் தூக்கி சார்ஜண்ட் மீது தாக்குதல் மேற்கொண்டாராம். அதில் சார்ஜண்ட் படுகாயமடைந்தார்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையத்தில் இருந்த ஏனைய பொலிஸார் அந்த இளைஞனை மடக்கிப் பிடித்து கைவிலங்கிட்டு, பொலிஸ் நிலையக் கைதி கூட்டின் வெளிப் பகுதில் வைத்திருந்த நிலையில் அந்த இளைஞன் தனது தலையை கூண்டின் கதவில் அடித்திருக்கின்றார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதனைத் தடுக்க முற்பட்டபோது அவரை வாயால் கடித்து, அவரது சீருடையை கிழித்திருக்கின்றார். அவரைக் காப்பாற்ற சென்ற இரு பொலிஸார் மீது இளைஞனுடன் அவரது தாயார் சகோதரிகள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது. இதில் காயமடைந்த 4 பொலிஸார் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடாத்திய இளைஞன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் இளைஞன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரையும் கைது செய்து மட்டக்களப்பு பதில் நீதிவான் முன்னிலையில் அவர்களை சனிக்கிழமை ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை கைது செய்யப்பட இளைஞன் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் வீதியல் செல்வோர் மீது தாக்குதல் நடாத்திய சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுக்திய நடவடிக்கையின்போது மனிதாபிமானமற்ற கைதுகள்!

## மனித உரிமை ஆணைக்குழு கவலை




பொலிஸாரும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் யுக்திய நடவடிக்கை தொடர்பில் இலங்கையின் மனிதஉரிமை ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

டிசம்பர் 17 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி முதலான வரையான காலப்பகுதிக்குள் 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது எனவும், போதைப் பொருள், திட்டமிட்ட குற்றச்செயல்களிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே இதன் நோக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டமிட்ட குற்றச்செயல்களையும் ஆபத்தான போதைப் பொருள்களை கடத்துவதையும் தடுப்பது மிகவும் அவசியமான நோக்கம் என்பதையும் மனித உரிமை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

எனினும் யுக்திய நடவடிக்கையின்போது சித்திரவதைகள், ஈவிரக்கமற்ற மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதல், கண்மூடித்தனமான கைதுகள் தடுத்துவைத்தல் என்பன இடம்பெறுகின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

யுக்திய நடவடிக்கை குறித்து கடும் கரிசனையை வெளியிட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நடவடிக்கை பரந்துபட்ட நீதியுடன் இனங்காணப்படுவதாக மாறியுள்ளது யுக்திய என்ற சிங்கள சொல்லிற்கு பொருத்தமற்றதாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகளின் போது இளைஞர்கள் உள்ளிட்டவர்கள் ஈவிரக்கமற்ற, மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்தப்படுகின்றனர் என்ற அறிக்கைகளால் கலக்கமடைந்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# பங்களாதேஷ் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழும்பு, ஜனவரி.08

பங்களாதேஷில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஷேக் ஹசீனாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

ஷேக் ஹசீனாவுக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷ் மக்களுக்கு ஷேக் ஹசீனா வழங்கிய சேவையும் தொலை நோக்கு பார்வையும் கொண்ட தலைமைத்துவமே இந்த மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஷேக் ஹசீனாவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கும் பங்களாதேஷ்க்கும் இடையிலான நெருங்கிய நட்புறவுமிக்க இருதரப்பு உறவுகள் வலுப்பெற்றுள்ளன எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இரு நாட்டு மக்களுக்கும் பரஸ்பர நன்மைகள் ஏற்படும் விதத்தில் அந்த உறவுகள் மேலும் விரிவுபடுத்த எதிர்பார்த்துள்ளார் எனவுன் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஷேக் ஹசீனா விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டும் எனவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையிலான அரசியல், பொருளாதார, கலாசார உறவுகளை மேம்படுத்தவும், இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கை மற்றும் நட்புறவை வலுப்படுத்தவும் இந்த விஜயம் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஷேக் ஹசீனா மூலம் இலங்கைக்கு, பங்களாதேஷ் வழங்கிய தனித்துவமான உதவிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஷேக் ஹசீனாவின் இலங்கை மற்றும் மக்கள் மீதான அக்கறை மற்றும் நல்லெண்ணத்தையும் பாராட்டியுள்ளார்.

பங்களாதேஷ் மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்துக்காக உழைக்க பிரதமர் ஷேக் ஹசீனா சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன் எனவும் அவரது எதிர்கால முயற்சிகளுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் தனி அஸ்வெசும நலன்புரிப் பிரிவுகள்




அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவிற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் தனியான விசேட பிரிவுகளை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்துக்கான அனைத்து மேன்முறையீடுகளுக்கும் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு பெற்றுத் தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவிற்கான இரண்டாவது சுற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி சிறப்புப் பிரிவுகளுக்கு கிராம மட்டத்தில் அதிகாரி ஒருவரை நியமிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

# மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்: மழை வெள்ளம் குறித்து தினகரன் கோரிக்கை



தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொடர்மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என டி.டி.வி. தினகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் வாழ்வாதாரத்தை இழந்த சென்னை மற்றும் தென்மாவட்ட மக்கள், அந்த பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்குள் மீண்டும் கனமழை பெய்யத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோரிக்கை விடுத்து அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், மழையால் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே கணித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தோடு, இந்த காலத்தில் பரவக் கூடிய நோய்த்தொற்றுகளில் இருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் டி.டி.வி. தினகரன் தமிழக அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

# மக்களவை தேர்தலை முன்னிட்டு 8 மாநிலங்களுக்கு தேர்தல் குழு

## - காங்கிரஸ் புதிய வியூகம்




மக்களவை தேர்தலை முன்னிட்டு முதல் கட்டமாக 8 மாநிலங்களுக்கு தேர்தல் குழுவை காங்கிரஸ் கட்சி நியமித்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், "ராஜஸ்தான், கேரளா, தெலுங்கானா, சத்தீஸ்கர், இமாச்சல பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் திரிபுரா ஆகிய 8 மாநிலங்களில் தேர்தல் குழுவை அமைக்கும் முன்மொழிவுக்கு காங்கிரஸ் தலைவர் கார்கே ஒப்புதல் அளித்துள்ளார்.

அத்துடன், மத்திய பிரதேச தேர்தல் குழு மற்றும் அரசியல் விவகாரக் குழு அமைப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநில பிரதேச காங்கிரஸ் குழு தலைவராக கோவிந்த் சிங் தோதஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த குழுவில் முன்னாள் முதல்வர் அசோக் கெலாட்டும் உறுப்பினராக இடம்பெற்றுள்ளார்.

கேரள தேர்தல் குழு தலைவராக கே.சுதாகர் நியமிக்கப்பட்டார். தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பிரதேச தேர்தல் குழு தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இமாச்சல தலைவராக பிரதீபா சிங் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று, மத்திய பிரதேஷில் ஜிதேந்திர சிங் தலைமையில் அரசியல் விவகாரக் குழுவையும் காங்கிரஸ் கட்சி அமைத்துள்ளது.

சத்தீஸ்கர் தேர்தல் குழுவின் தலைவராக தீபக் பைஜ் நியமிக்கப்பட்டுள்ளார். மணிப்பூரில் பிரதேச தேர்தல் குழுவின் தலைவராக கே மேகசந்திர சிங் நியமிக்கப்பட்டுள்ளார்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# டில்லியில் தனிநபர் வருமானம் அதிகரிப்பு: கெஜ்ரிவால் பெருமிதம்

டில்லியில் கடந்த ஆண்டில் மாத்திரம் தனிநபர் வருமானம் மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் டெல்லியில் தனிநபர் வருமானம் நடப்பு நிதியாண்டில் 3 லட்சத்து 89 ஆயிரத்து 529 ரூபாயிலிருந்து 4 லட்சத்து 44 ஆயிரத்து 768 ஆக அதிகரித்துள்ளதாகவும், இது தேசிய சராசரியை விட 158 சதவீதம் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து லில்லியின் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "2 கோடி டில்லி மக்கள் மற்றும் டில்லி அரசின் இரவு பகலான கடின உழைப்பு மற்றும் கூட்டு முயற்சிகளால் தனிநபர் வருவாய் அதிகரித்துள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் பல புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அதுமட்டுமல்லாது மேலும் பல விடயங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு: பொலிஸார் 6 பேர் உயிரிழப்பு!



பாகிஸ்தானில் போலியோ தடுப்பூசி செலுத்தச் சென்ற மருத்துவக்குழுவுக்கு பாதுகாப்பு வழங்கிய 6 பொலிஸார் வெடிகுண்டு தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் போலியோ தடுப்பூசி செலுத்துவதற்காக நேற்று காலை அந்த பகுதிக்கு மருத்துவக்குழு ஒன்று சென்றிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக பொலிஸ் குழு ஒன்று சென்றுள்ளது.

இந்த நிலையில், பொலிஸாரை குறிவைத்து மர்ம நபர்கள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த குண்டு வெடிப்பில் 6 பொலிஸார் உயிரிழந்தனர். மேலும் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் பற்றி தகவல் அறிந்து பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர். ஆப்கானிஸ்தானின் எல்லையோர மாகாணத்தில் உள்ள பஜார் மாவட்டத்தில் உள்ள மாமுண்ட் தாலுகாவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து, அந்த பகுதியை பாதுகாப்புப்படையினர் சுற்றி வளைத்து மர்ம நபர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த குண்டு வெடிப்புக்கு எந்த ஒரு குழுவோ அல்லது தனிநபரோ பொறுப்பேற் கவில்லை.

பாகிஸ்தான் தலிபான்கள் உட்பட மத தீவிரவாதிகள், கடந்த காலங்களில் போலியோ சொட்டு மருந்து செலுத்தும் பணியாளர்களையும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸாரையும் கொன்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் வாழ்நாள் முழுவதும் இயலாமையை ஏற்படுத்தக்கூடிய வைரஸான போலியோ தொடர்ந்து பரவி வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

# இஸ்ரேலின் ஆளில்லா விமான தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் சிரேஷ்ட தளபதி பலி



இஸ்ரேலிய ஆளில்லா விமானம் தெற்கு லெபனானில் உள்ள மஜ்தால் செல்ம் கிராமத்தில் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் சிரேஷ்ட தளபதியொருவர் கொல்லப்பட்டுள்ளார் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

“அல்-ஹா ஜவாத்” என்று அழைக்கப்படும் விஸாம் ஹசன் தவில் கொல்லப்பட்டுள்ளார் என்பதை ஹிஸ்புல்லா அமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு ஆதாரங்களை மேற்கோள் காட்டி, விஸாம் ஹசன் தவில் ஹிஸ்பொல்லாவின் உயரடுக்கு ரட்வான் படையில் உள்ள ஒரு பிரிவின் துணைத் தலைவராக இருந்தார் என ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய ஆளில்லா விமானம் ஹிஸ்புல்லாவின் களத் தளபதியின் காரை குறிவைத்து நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார். அடையாளம் காணப்படாத மற்றொரு ஹிஸ்புல்லா உறுப்பினர் காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பான் நில நடுக்கம்: உயிரிழப்பு 160 ஆக அதிகரிப்பு




ஜப்பானில் ஏற்பட்ட நில அதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், 103 பேர் காணாமல் போயுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, பனிப்பொழிவு காரண மாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.



# காத்தான்குடி ஏத்துக்கால் கடலில் பேரலையில் சிக்கிக் கவிழ்ந்த படகு

## படகும், இயந்திரமும் பலத்த சேதம்; மீனவர் தப்பினர்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி ஏத்துக்கால் கடலில் மீன்பிடிப்படகு ஒன்று கவிழ்ந்து விழுந்ததில் மீன்பிடி படகும் படகின் இயந்திரமும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

படகில் பயணித்த மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பி கரையை வந்தடைந்தனர்.

கடலில் திடீரென ஏற்பட்ட பாரிய அலையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.



# 84 கிலோ நிறையுடைய கேரள கஞ்சா வல்லிபுரம் காட்டுப் பகுதியில் சிக்கியது




யாழ்ப்பாணம் – வடமராட்சி பகுதியில் 84 கிலோ கிராம் நிறையுடைய கேரள கஞ்சா நேற்றுத் திங்கட்கிழமை விசேடஅதிரடிப்படையினரால் மீட்கப்பட்டது.

பருத்தித்துறை – வல்லிபுரம் காட்டுப் பகுதியிலேயே போதைப்பொருள் இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

மீட்புச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலையில் கைப்பற்றப்பட்ட பொருள்களை பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# மன்னாரின் புதிய அரச அதிபருக்கு தென்மராட்சியில் கௌரவிப்பு விழா

யாழ். தென்மராட்சி மண்ணில் இருந்து மன்னார் மாவட்ட அரச அதிபராக கடமையைப் பொறுப்பேற்ற க.கனகேஸ்வரனை (இலங்கை நிர்வாக சேவை – விசேட தரம்) கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தின்ச்ம் ஞாயிற்றுக் கிழமை கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

தென்மராட்சி மக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் அவரது தாயார் க.கனகம்மா மற்றும் மதகுருமார்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள், பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர், விரிவுரையாளர்கள், சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமயப் பெரியோர்கள், தென்மராட்சி ஊடகவியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

மாலை அணிவித்து, நினைவுச் சின்னம், வாழ்த்துப் பாமாலை வழங்கி விழா நாயகன் கௌரவிக்கப்பட்டமையோடு அவரது பாரியாரும் தாயாரும் கௌரவிக்கப்பட்டனர்.

















# 86 கோடி ரூபா பெறுமதி அபின் யாழில் சிக்கியது!






வடக்கில் முதல்முறையாக யாழ்ப் பாணம் பருத்தித்துறை பகுதியில் பெருந்தொகை பெறுமதியான அபின் போதைப்பொருள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.வல்லிபுரம் கடற் கரைப் பகுதியில் மூன்று பொதிகளில் இருந்து இந்தப் போதைப்பொருள்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை மீட்கப் பட்டுள்ளன.

48 கிலோ நிறை கொண்ட அபின் போதைப்பொருளும் 28 கிலோ நிறை கொண்ட கேரள கஞ்சாவுமே மீட்கப் பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட அபின் போதைப் பொருளின் பெறுமதி 86 கோடி ரூபா எனவும் கேரள கஞ்சாவின் பெறுமதி 45 லட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளாவியரீதியில் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்பில் 'யுக்திய' போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் பருத்தித்துறைப்பொ லிஸா ருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவ லுக்கமைய வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் வழிகாட்டலில் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமாகாணத்தில் அபின் போதைப் பொருள் பாரியளவில் கைப்பற்றப் படுவது இதுவே முதல் முறை என தெரி விக்கப்படுகிறது.

# அம்பாறை மாவட்ட தமிழ் இலக்கிய விழா இன்றைய தினம் அட்டாளைச்சேனையில்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்ட தமிழ் இலக்கிய விழா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்ஸான் ஒருங்கிணைப்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் ஷாபிர் தலைமையில் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு அல்-ஷக்கி வரவேற்பு மண்டபத்தில் இன்று நடைபெறுகிறது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள இந்த மாவட்ட இலக்கிய விழாவில் மாவட்ட மட்ட இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் ஊடாக பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கலை ஞர்களுக்கு சுவதம் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது. கலைஞர்கள், பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட இருப்பதுடன் சிறப்பு நிகழ்வுகள் பலவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், எச்.எஸ். என்.டி.சொய்சா ஸ்ரீவர்த்தன உட்பட பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய அதிதிகள் எனப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ள னர்.



# சாவகச்சேரியில் அரங்கேறிய நிருத்திய நாட்டிய சங்கமம்!

தென்மராட்சி பூர்ணா நர்த்தனாலயம் நடத்திய நிருத்திய நாட்டிய சங்கமம் நேற்று முன்தினம் சாவகச்சேரி கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரத்ன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண நடனபாட ஆசிரிய ஆலோசகர் பாரதி சிவயோகநாதனும், சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை வலய கல்வி பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், கோப்பாய் தேசிய சேமிப்பு வாங்கியின் முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சைந்தவி ஜனார்த்தனன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் தயா சக்தி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நாட்டிய சங்கமம் நிகழ்வில் பூர்ணா நர்த்தனாலாலய மாணவிகளின் நாட்டிய அரங்கேற்றங்களும் இடம்பெற்றன. நிகழ்வில் நடன மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டிருந்தனர்.



















# புத்த பெருமானுடன் மிதப்பை குடாரப்பில் கரை ஒதுங்கியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு குடாரப்புப் பகுதியில் புத்த பெருமான் அமர்ந்திருக்கும் அலங்கரிக்கப்பட்ட மிதப்பை ஒன்று நேற்றும் கரை ஒதுங்கியுள்ளது.

இதனை மக்கள் பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் தொடர்ச்சியாக பல வேறு பொருள்கள் மற்றும் இவ்வாறான அலங்கரிக்கப்பட்ட மிதப்பைகள் கரை ஒதுங்கி வருகின்றன.

இதுவரை யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று, பௌத்த கொடியுடன் கூடிய மிதப்பு ஒன்றும், மூடிய கொள்கலன் ஒன்றும் கரை ஒதுங்கியிருந்தன.

நாகர்கோவில் பகுதியிலும் மரத்தினாலான மிதப்பு ஒன்று கரை ஒதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஸ்கானர் இயந்திரத்துடன் வைத்தியர் உட்பட மூவர் நேற்றுக் கைது

## இரு வாகனங்களும் பறிமுதல்



(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரிடம் புதையல் தொடர்பான ஸ்கானர் இயந்திரம் ஒன்றை 15 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற வைத்தியர் உள்ளிட்ட மூவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக நேற்று அதிகாலை பொலிஸாரின் விசேட புலனாய்வு பிரிவினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினர் இணைந்து இந்த மூவரையும் கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இளைஞர் ஒருவர் புதையல் தோண்டும் ஸ்கானர் இயந்திரம் ஒன்றை விற்பனை செய்வதற்காக பொலிஸ் புலனாய்வு பிரிவு எனத் தெரியாது, புலனாய்வு பிரிவினரிடம் விலை பேசியுள்ளார். அந்த ஸ்கானர் இயந்திரத்தை 15 லட்சம் ரூபாவுக்கு விலை பேசிய அவர், கார் மற்றும் ஹயஸ் ரக வாகனம் என்பவற்றில் குறித்த ஸ்கானர் இயத்திரத்தை வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதன்போது அங்கு நின்ற பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினர் இணைந்து குறித்த ஸ்கானர் இயந்திரத்தை கைப்பற்றியமையுடன், அதனை உடமையில் வைத்திருந்த வைத்தியர் உள்ளிட்ட மூவரையும் கைது செய்தனர். அவர்கள் பயணித்த வாகனத்தையும் மீட்டனர்.

34 வயதுடைய – மதாவாச்சியைச் சேர்ந்த – வைத்தியர், 38 வயதுடைய வவுனியா மணிபுரம் பகுதியை சேர்ந்த இளைஞர் மற்றும் வவுனியா கூமாங்குளம் பகுதியை சேர்ந்த 31 வயதுடைய இளைஞர் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மீட்கப்பட்ட ஸ்கானர் இயந்திரத்துடன் வவுனியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# லசந்த விக்கிரமதுங்கவின் நினைவு தினமான நேற்று மட்டக்களப்பில் கவனவீர்ப்பு நிகழ்வு!

(பழுவூரான்)

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் 15 ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு நகர்ப் பகுதியிலுள்ள காந்திப் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செயய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபியில் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

இதன்போது நினைவுத் தூபியில் வைக்கப்பட்டிருந்த அமரர் லசந்த விக்கிரமமதுங்கவின் திருவுருவப் படத்திற்கு வணபிதா ஜீவராஜ் மற்றும் விரிவுரையாளர் எஸ்.பெர்ணாண்டோ ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்தனர். அத்தோடு ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் கடத்தப்பட்டுப், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து “வேண்டும், வேண்டும் நீதி வேண்டும்”, “சர்வதேச விசாரணை வேண்டும்”, “அடக்காதே, அடக்காதே ஊடகங்களை அடக்காதே” போன்ற வாசகங்களை விண்ணதிர எழுப்பினர்.

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.















# லசந்தவைக் கொன்றவர்களை பொறுப்புக்கூறச் செய்யுங்கள்!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தல்

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த நிலையில், அந்த படுகொலையுடன் தொடர்புடையவர்களை தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை –

"15 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு நாளில் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். அந்த வழக்கை உள்ளக நீதியில் தீர்ப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்ற போதிலும், வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அதுமாத்திரமன்றி லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ச்சியாகப் போராடிவரும் அவரது குடும்பத்தினருக்கு இன்றைய திகதி வரை நீதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தண்டனைகளிலிருந்து விடுபடுவதை உடன் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அவர்களைத் தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யவேண்டும்."

– என்று மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் –

"இலங்கையில் உண்மையைப் பாதுகாக்கப் போராடிய ஊடகவியலாளரும், பத்திரிகை ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. உலகளாவிய ரீதியில் ஒடுக்கு முறைகளையும், மீறல்களையும், சிறைத் தண்டனையையும், தமது பணியைச் செய்தமைக்காக உயிரச்சுறுத்தலையும் எதிர்நோக்கியிருக்கும் ஊடகவியலாளர்களுடன் அமெரிக்கா உடன் நிற்கும். சுயாதீன ஊடகமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் மிகமுக்கிய அங்கங்களாகும்."

என்று குறிப்பிட்டுள்ளார்.

# தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அந்த கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால, அந்த பதவியில் தொடருவதற்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

# யாழில் மூத்த நிர்வாக அதிகாரிகள் நேற்று முதல் புதிய பொறுப்புகளில்

( ந.லோகதயாளன் )

யாழில் பல மூத்த நிர்வாக அதிகாரிகள் நேற்றைய தினம் முதல் இடமாற்றப்பட்டு புதிய பொறுப்புக்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்வாக சேவை தரத்திலான உத்தியோகத்தர்களான தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி கோப்பாய் பிரதேச செயலாளராகவும், கோப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய சுபாசினி மதியழகன் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்கும் நியமிக்கப்பட்டு கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

இதேபோன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக பணியாற்றிய யசோதா உதயகுமார் நல்லூர் பிரதேச செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். நல்லூர் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய எழிலரசி திருகோணமலை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதேநேரம் இதுவரைகாலமும் திருகோணமலை மாவட்ட சமுரத்திப் பணிப்பாளராகப் பணியாற்றிய சிவகங்கா நேற்று தெல்லிப்பளை பிரதேச செயலாளராகப் பதவியேற்றுள்ளமையோடு பருத்தித்துறை பிரதேச செயலாளராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராக பணியாற்றிய சத்தியசீலன் பொறுப்பேற்றுள்ளார்.



# வவுனியா இரட்டைக் கொலை பிரதான சந்தேக நபரை நீதிமன்ற வளாகத்தில் அச்சுறுத்தியதாக மன்றில் புகார்

## விசாரணையின் பின் விடுவிக்கப்பட்ட குடும்பஸ்தர்

**(கி.வசந்தரூபன்)**

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைகொலைச் சம்பவம் தொடர்பில் தடுப்புக் காவலில் உள்ள பிரதான சந்தேக நபரை நீதிமன்ற வளாகத்தில் வைத்து எரியுண்ட வீட்டு உரிமையாளரான குடும்பஸ்தர் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டார் எனப் பிரதான சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜுலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெற்றோல் ஊற்றி எரியூட்டிய சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று வவுனியா நீதிமன்றில் இடம்பெற்றது. அதற்காக சந்தேக நபர்களை மன்றுக்கு அழைத்து வந்த போது, பிறிதொரு வழக்குகாக மன்றுக்கு வந்திருந்த எரியுண்ட வீட்டு உரிமையாளர் இரட்டைக் கொலை பிரதான சந்தேக நபரை அச்சுறுத்தினார் எனப் பிரதான சந்தேகநபர் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இதனையடுத்து, குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரான எரியுண்ட வீட்டு உரிமையாளரை நீதிமன்றச் சிறைக் கூண்டில் தடுத்து வைக்க மன்று உத்தரவு பிறப்பித்ததுடன், சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்யுமாறு வவுனியா பொலிஸாருக்குக் கட்டளையும் பிறப்பித்தது.

நீதிமன்றம் சென்ற வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன், நீதிமன்றில் அச்சுறுத்தியவர் எனக் கூறப்பட்ட எரியுண்ட வீட்டு உரிமையாளரை முன்னிலைப்படுத்தினர். இதன்போது இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட மன்று, எரியுண்ட வீட்டின் உரிமையாளரை எச்சரித்து விடுவித்ததுடன், இது தொடர்பில் பொலிஸாரை விரிவான விசாரணைகளைச் செய்யுமாறும், குற்றம் ஏதாவது நிகழ்ந்திருப்பின் மன்றில் பி அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்ததுடன், எரியுண்ட வீட்டு உரிமையாளரை பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கட்டளையிட்டது.



# நேற்று மாலை வரை ஒரு நாளில் 955 சந்தேகநபர்கள் கைதாம்!

நாட்டில் நேற்று மாலையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 955 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கடந்த 22 நாள்களுக்குள் யுக்திய சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 29,475 ஆக அதிகரித்துள்ளது.

1,473 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

220 சந்தேகநபர்கள் தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பட்டியலிடப்பட்ட 4 ஆயிரத்து 584 சந்தேகநபர்களில் 2 ஆயிரத்து 326 பேர் யுக்திய சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் யுக்திய சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.01.2024




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தை குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்குச் சுமையாகத் தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுகள் மட்டும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்களின் திறமை மூலம் இன்று முன்னேற்றகரமான பலன்கள் காண்பீர்கள். நீண்ட காலத் திட்டம் அமைக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்புக்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாகச் சுய முனேற்றப் பாதையில் செல்வீர்கள். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். பணியில் உங்கள் கூடுதல் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். எனவே அதனை மாற்றித் துடிப்புடன் செயல்பட வேண்டும். நேர்மறையான கண்ணோட்டம் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு அனுகூலமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று ஏற்படும் அதிக செலவுகள் தவிர்க்க முடியாதன. எனவே செலவுகளைக் கட்டுபடுத்துங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முதுகு வலி மற்றும் இருமல் போன்ற பாதிப்புகள் காணப்படும்.




உங்கள் தவறுகளை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும். உங்கள் செயல்களில் கட்டுப்பாடு வேண்டும். உங்கள் செயல்களை முறைப்படுத்தி ஆற்றுவதன் மூலம் இழப்பு ஏற்படாமல் இருக்கும்.

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நீங்கள் திட்டமிட்டு பணத்தை செலவு செய்ய வேண்டும்.




இன்று துடிப்பான முன்னேற்றகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்களை முன்னேற்றிக் கொள்வதில் முனைவீர்கள். இன்று உங்களுக்கென சிறப்பம்சத்தை உருவாக்குவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். சரியான நேரத்தில் அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். அதன் காரணமாக முன்னேற்றம் அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இருவருக்கிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படுவதால் சிறப்பான நாளாக இருக்கும். இந்தப் பணம் ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.




இன்று சோதனையான நாளாக இருக்கும். எதைப்பற்றியும் கவலையின்றி அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் ஆதாயம் கிடைப்பது கடினம். சிறிய செயல்களை முடிக்க கடுமையான முயற்சி தேவைப்படும். சக பணியாளர்களுடனான உறவு நல்லுறவாக இருக்காது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இது முற்றிலும் தேவையற்றது. எனவே நட்பான அணுகுமுறையோடு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுப்புகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று முதுகுவலி வாட்டும்.




ஆன்மீக விழிப்புணர்வும் ஈடுபாடும் மகிழ்ச்சி அளிக்கும். இன்று அனுபவத்தின் மூலம் பாடம் கற்க நேரலாம்.

பணி வளர்ச்சி சராசரியைவிடச் சற்றுக் கூடுதலாக இருக்கும். இன்று அதிக பணிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

உறவுப் பிணைப்பு வலுவற்றதாக இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க நட்பான அங்குமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதி நிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதன் வேகத்தில் நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். எனவே திட்டமிட்டு செயற்படுங்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.01.2024




முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உங்கள் உணர்ச்சியுடன் போராடி உங்கள் சுய முன்னேற்றத்துக்கு முயல வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நண்பர் இல்ல விழாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருப்பீர்கள். பதற்றமான சூழ்நிலை ஏற்படும் என்பதால் அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். வறுத்த மற்றும் கார உணவுகளை தவிர்த்தல் நல்லது.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். முக்கிய முடிவுகள் இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எந்தச் சவால்களையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று மகிழ்ச்சியான மன நிலையில் இருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சி உங்கள் செயல்களில் வெளிப்படும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இன்னும் மகிழ்ச்சியாக இருக்க இயலும்.

உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டுமென்ற உறுதி உங்கள் அணுகுமுறையில் காணப்படும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை உண்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை ஏற்படுத்த உங்களுக்கு வளர்ச்சி ஏற்படுத்தும் வகையிலான சேமிப்பு திட்டத்தில் கலந்து கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சி குறைந்து காணப்படும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பணிகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்ள வேண்டும். சக பணியாளர்களுடன் கருத்து வேற்றுமை காணப்படும்.

உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வதன் மூலம் பிரச்சினை ஏற்படலாம். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் அசௌகரியம் காரணமாக இன்று உங்களுக்கு முட்டி வலி பாதிப்பு ஏற்படும்.








# ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக செங்கடலுக்கு கப்பல்களை அனுப்பத் தயார்!

## இலங்கைக் கடற்படை தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய செங்கடல் மற்றும் அதனை அண்மித்த பிராந்தியத்திற்கு இலங்கைக் கடற்படையின் கப்பல்களை அனுப்பி வைக்க தயார் என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கப்பல்கள் ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் Prosperity Guardian நடவடிக்கையில் இணைக்கப்படவுள் என எனக் கடற்படை ஊடகப் பேச்சாளர், கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

கப்பலை அனுப்பிவைக்க வேண்டிய திகதி தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

செங்கடலை அண்மித்த அரபுக்கடல், கல்ஃப் கடல் உள்ளிட்ட பிராந்தியம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் Prosperity Guardian நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# சிறுமியின் மீது கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் காத்தான்குடியில் மூன்று இளைஞர்கள் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டு. காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் 15 வயது சிறுமி ஒருவரை அழைத்துச் சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோம் மேற்கொண்ட 3 பேரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிமை காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை 15 வயதும் 7 மாதங்களும் கொண்ட சிறுமியை அந்தபகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவர் வீடு ஒன்றிற்கு வரவழைத்து, அங்கு அவரின் நண்பர்கள் இருவர் உட்பட 3 பேர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி இவ்விடயத்தை உறவினரிடம் தெரிவித்ததமையை அடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. காத்தான்குடி பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கஜநாயக்கா தலைமையிலான குழு விசாரணைகள் மேற்கொண்டுவந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உசுத்திய அந்த பகுதியைச் சேர்ந்த 26,26, 32 வயதுடைய 3 பேரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.